சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No: 109/2022 Date: 24.06.2025

வாதி தரப்பு சாட்சி–3(Pw3) ன் வாக்குமூலம் (1872 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | சாதி | : | -- |
| த/பெ | : | காளிமுத்து | சமயம் | : | -- |
| கிராமம் | : | சாமிநத்தம் | தொழில் | : | |
| தாலுகா | : | சிவகாசி | வயது | : | 53 |

<u>முதல் விசாரணை–</u>

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் 5/258 அம்மன்நகர், புதுப்பட்டி மெயின் ரோடு என்ற முகவரியில் கடந்த 16 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். அதன் சர்வே எண்.964/2 ஏ 1. நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருவதற்கான எனது ஆதார் அடையாள அட்டையை தாக்கல் செய்கிறேன். எனது ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் **சா.சா.ஆ.6** (அசலுடன் ஒப்பிடப்பட்டது). சர்வே எண்.964/2 ஏ 1 சி ல் உள்ள நிலத்தில் நான் வீட்டு மனை வாங்கியதற்கான 23.09.2009 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் **சா.சா.ஆ.7**(அசலுடன் ஒப்பிடப்பட்டது). சர்வே எண்.964/2 ன் மொத்த விஸ்தீரணத்தில் 7 ஏக்கர் 64 செண்ட் வடபகுதியான வேலுச்சாமி என்பவர் பாகத்தில் கிடைத்ததை பல பிளாட்டுகளாக பிரித்ததை நான் வாங்கினேன். முருகானந்தம் மகன் பாலசுப்பிரமணியன் அந்த சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், அது சம்மந்தமாக சாட்சி சொல்ல

வந்துள்ளேன். அவர் சொன்னதின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கிரையம் வாங்கியுள்ள பிளாட்டின் தெற்குபுறம் பாலசுப்பிரமணியன் விவசாயம் செய்து வருகிறார். ஒரு பகுதியில் குளம் அமைத்து விவசாயத்திற்கு நீர் பாய்ச்சி வருகிறார். அந்த குளமானது 964/2ன் தென் பகுதியிலும், பாலத்திற்கு மேற்கு பகுதியிலும், கிழக்கு பகுதியிலும் உள்ளது. மேற்படி குளத்தை முருகானந்தம் மகன் பாலசுப்பிரமணியன் விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகிறார். அதிலுள்ள பாதை, பாலம் பாலசுப்பிரமணியன் கட்டினார். அந்த சொத்து சிங்கத்துரை தேவருக்கும் பாத்தியப்பட்டது, அவர்கள் சொத்தின் பொறுப்பினை பாலசுப்பிரமணியத்திடம் ஒப்படைத்து அவர் விவசாயம் செய்து வருகிறார். சர்வே எண்.964/2ல் உள்ள குளம், அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 39 செண்ட். அதை முருகானந்தம் மக்களும், சிங்கத்துரை மக்களும் பயன்படுத்தி வருகிறார்கள். நான் கிரையம் பெற்ற சொத்து சர்வே எண்.964/2ன் வடபகுதியில் என் முன்பாத்தியஸ்தர்களான அய்யாசாமி மகன் வேலுச்சாமி, கிருஷ்ணசாமி மகன் அய்யாச்சாமி, அய்யாச்சாமி மகன் ராஜா ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு, என் பெயருக்கு நான் கிரையம் பெற்ற சொத்திற்கு பட்டா மாறுதல் உத்தரவு பெறப்பட்டுள்ளது. அந்த பட்டா மாறுதல் உத்தரவு **சா.சா.ஆ.8**.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. பாலசுப்பிரமணியன் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கிரையம் பெற்ற சொத்து வீட்டு மனை உள்ளதால் விவசாயம் நிலம் என்றால் விவசாய நிலத்தை ஒரு பங்காளி பிளாட் போட்டு விற்கிறார்.

விவசாய நிலத்தில் குடியிருப்பு கட்டிடம் கட்டினால் குற்றம் என்றால் சரிதான். எனது குடியிருப்பு பகுதியில் அரசு நடவடிக்கை எடுத்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.8 ல் சர்வே எண்.964/2 புஞ்சையாக தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.964/2 ல் இருபுறம் குளமும், அருகில் பாலமும் உள்ளதாக தான் வருவாய் துறை ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான், 20 ஆண்டுகளுக்கு முன்பு சொந்த உபயோகத்திறகு தோண்டினார்கள். குளம் தோண்ட அரசு அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். குளம் தோண்டுவதற்கு பாலசுப்பிரமணிய வகையறா அனுமதி பெற்றார்களா என்று தெரியாது. இதே சர்வே எண்ணில் நடுவில் பஞ்சாயத்தில் இருந்து தார் ரோடு அமைத்திருந்தார்கள், அந்த தார் ரோட்டில் மின் கம்பங்கள் பதிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த மின் இணைப்புகள் 4, 5 தெருக்களுக்கு பயன்படுகிறது என்றால் சரிதான். பாலசுப்பிரமணியன் பிராதில் என்ன சொல்லியுள்ளார் என்று எனக்கு தெரியாது. பிராதில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் சொல்லியுள்ளார்கள் என்று தெரியாது. அதில் யாரை தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என்று தெரியாது. என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்குரை சொத்துக்கும், நான் சொல்லக்கூடிய சாட்சியமும் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் சட்ட நிர்ணய காலத்திற்கும் மேலாக வழக்குரை சொத்தை அனுபவம்செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக தவறான சங்கதிகளை சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.964/2 ஆனது எத்தனை உட்பிரிவுகளாக உள்ளது என்றும், அது யார் யார் அனுபவத்தில் உள்ளது என்றும் நான் தெரிந்துகொள்ளவில்லை.

வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், பாலசுப்பிரமணியன் கேட்டுக்கொண்டதினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.